2. அறிவிப்பு.

திருத்தப் பெறும் விடைகளும் துறைக்கு அனுப்பப் பெறுதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மாண்புமிகு அமைச்சர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்டு வினாக்களுக்கான விடைகள் பேரவைத் துறைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. இந்த விடைகள் தான் வினாக்கள் பேரவையில் கேட்கப்பட்டவுடன் பத்திரிகைகளுக்குக் கொடுக்கப்பட்டு வருகின்றன. சில சமயங்களில் பேரவையில் வினாக்கள் விடையளிக்கப்படுகையில் மாண்புமிகு அமைச்சர்கள் திருத்திய விடைகளை அளிக்கிறார்கள். அப்படி தாங்கள் ஏற்கெனவே அனுப்பிய விடைகளில் திருத்தம் இருக்குமானால் பேரவைத் துறைக்கு முன்னதாகத் தகவல் அளித்து, திருத்தப்பட்ட விடைகளையும் அனுப்பி வைப்பதுதான் முறையாக இருக்கும் என்பதை மாண்புமிகு அமைச்சர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. தகவல் கோரல்.

(அ) பேரவையின் அலுவல் நேரம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவரவர்களே, நம்முடைய மாமன்றத்திலே 1982-83 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. சனிக்கிழமை அன்று கட்சித் தலைவர்கள் பேசி, விவாதத்திற்கு பதில் அளிக்க இருக்கிறார்கள். எங்கள் கட்சியைப் பொறுத்தவரையில் இன்றைக்கு இரண்டாவது பிரதான எதிர்க்கட்சியாக இங்கே இருக்கிறது. அப்படி இருந்தாலும் நாள் ஒன்றுக்கு கட்சிக்கு ஒருவர் பேசுவது என்ற நடைமுறை இருப்பதால் பல உறுப்பினர்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. ஆகவே மாலை நேரத்திலும் அவைக் கூட்டத்தை நடத்தி, பல உறுப்பினர்களுக்குப் பேச வாய்ப்பு அளிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள்.

திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம் : தலைவரவர்களே, தூத்துக்குடியிலுள்ள அனல் மின்சார நிலையம் தீப்பிடித்ததன் காரணமாக இரண்டு, மூன்று நாட்களாக வேலை செய்யவில்லை. அதனால் . . ,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மின்சாரம் பற்றிய ஒத்திவைப்புத் தீர்மானம் இன்றைக்கு வருகிறது, உட்காருங்கள்,